**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,</u>**
**<u>ஸ்ரீவில்லிபுத்தூர்</u>**

**OS.No** 1/2021 நாள் 07.03.2026.

வாசா 1 , திருமதி . வெள்ளைதாய்

**வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 2 ஆம் எதிர்வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் இவ்வழக்கில் 1 ஆம் வாதி. 2 ஆம் வாதி அமெரிக்காவில் உள்ளார். நானும் 2 ஆம் வாதியும் 1 முதல் 3 எதிர்வாதிகளும் உடன்பிறந்தவர்கள். நான் தான் அனைவருக்கும் மூத்தவர். எனக்கு 1978 ஆம் ஆண்டு திருமணம் நடந்தது எனக்கு அடுத்து 1 எதிர்வாதி தங்கை ஆவார் அவருக்கு 1980 ஆம ஆண்டு திருமணம் நடந்தது. அதற்கு அடுத்தது 2 பிரதிவாதி என் தங்கை அவருக்கு 1987 ஆம் ஆண்டு திருமணம் நடந்ததாக நினைக்கிறேன். அதற்கு அடுத்தது 2 வாதியான தங்கை அவருக்கு 1990 ஆம ஆண்டு திருமணம் நடந்ததாக நினைக்கிறேன். என்னுடைய கடைசி தங்கை தான் 3 ஆம எதிர்வாதி அவருக்கு 2000 ஆம் ஆண்டில் திருமணம் நடந்தது. 3 ஆம் எதிர்வாதியும் தற்போது அமெரிக்காவில் உள்ளார். என் திருமணம் சமயத்தில என் வயது 21 வழக்கில் உள்ள 2 ஆம் எதிர்வாதியின் பெயர் வெங்கடரத்தினம் என்றால் வீட்டில் அவரை சந்தோஷ் கனி என்று கூப்பிடுவார்கள். அவருடைய உண்மையான பெயர் வெங்கடரத்தினம் தான். என் அப்பா பெயர் நீராத்தலிங்கம். நீராத்தலிங்கம் என்பவரின் அப்பா பெயர் வெங்கடாசல தேவர். என் தாயார் பெயர் பேச்சியம்மாள். என் தாத்தா வெங்கடாசல தேவரும் சீனியர் நீராத்தலிங்கமும் உடன்பிறந்தவர்கள். சீனியர் நீராத்தலிங்கம் என்பவரின் மனைவி பெயர் பார்வதி. அந்த பார்வதியின் அண்ணன் பெயர் வீரபுத்திரதேவர். அந்த வீரபுத்திரதேவரின் மகள் தான் என் தாயார் பேச்சியம்மாள். இந்த வழக்கை தாக்கல் செய்துகொள்ள வழக்கறிஞரிடம் நான் தான் விபவரம் சொன்னேன் அப்போது 2 ஆம் வாதியானர் அமெரிக்காவில் இருந்தார். நான் வழக்கறிஞரிடம் சொன்ன விபரம் 2 வாதிக்கு தெரியும். இந்த வழக்குரையில் நாங்கள் என்ன என்ன சொத்துக்களை சொல்லியுள்ளோம் என்று கேட்டால் சிங்கம்மாள்புரத்தில் உள்ள 12 ஏக்கர் தோப்பு, வாழைக்குளம் ஒத்த தெருவில் உள்ள வீடு, மம்சாபுரத்தில் பிரிக்கபடாத 33 செண்ட் காலிஇடம். பிராது 1 வது அயிட்ட சொத்தானது நான் தாக்கல் செய்துள்ள வா.சா. ஆ. 2 கிரைய ஆவணபடிக்கு என் தாயருக்கு பாத்தியம் என்றால் சரிதான். பிராது 2 ஆம் அயிட்ட வீடானது நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ. 1 ஆன என் அப்பா பெயரில் உள்ள கிரைய ஆவணம் என்றால் சரிதான். பிராது 1 வது அயிட்ட சொத்தை என் அம்மா கிரையம் வாங்கி அவர் பெயருக்கு பட்டா எண். 332 வாங்கி பட்டா பெயர் மாற்றம் செய்துள்ளார் என்றால் சரிதான். பிராது 1 ஆம் அயிட்ட சொத்தான து என் தாயார் 14.09.1999 தேதிய அடமான கடன் பத்திரத்தை திருவில்லிபுத்தூர் எஸ்.பி.எஸ்.பி.எல். 30 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் வைத்து இருந்தார் என்றால் சரிதான். அந்த அடமான கடன் பத்திரம் சான்றிட்ட நகல் என்னிடத்தில் காண்பிக்கபடுபவை என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ. 2. மேற்படி கடனை என் தாயார் செலுத்தி அதற்கு வங்கியின் செயலாளர் ஒரு பதிவு செய்யப்பட்ட ரசீதை எழுதி கொடுத்துள்ளார் என்றும் அந்த ரசீது என்னிடத்தில் காண்பிக்கபடுபவை என்றால் சரிதான் அந்த ரசீது பி.வா.ஆ. 3. பிராது 1 ஆம் அயிட்ட சொத்தானது என் தாயார் 02.12.2002 ல் மம்சாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் ஒரு அடமான கடனை வாங்கியிருந்தார் என்றால் சரிதான். அந்த கடனை என் தாயார் 23.12.2010

தேயில் என் தாயார் செலுத்திவிட்டதாற்கான ரசீது வங்கியின் செயலாளர் வழங்கியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி அடமான கடன் பத்திரம் பி.வா.சா.ஆ. 4 ரசீது பி.வா.சா. ஆ. 5. மேலும் என் தாயார் 26.02.1999 ஆம் தேதியில் முத்தைதேவருக்கு அடமமான கடன் எழுதிக்கொடுத்து அந்தத கடனை முத்தையாதேவர் மகன் திருப்பதியிடம் என் தாயார் 01.03.2010 ஆம் செலுத்தி ரசீது பெற்றுள்ளார் என்றால் சரிதான். அந்த பதிவு ரசீது பி.வா.சா.ஆ. 6. அதுபோக என் தாயார் பிராது 1 வது அயிட்ட சொத்தின் பேரில் திருவில்லிபுத்தூர் இந்தியன் வங்கியில் கடன் பெற்று என் தாயார் அந்த கடனை அடைத்தார் என்றால் நாங்கள் 5 பேரும் சேர்ந்து தான் அந்த கடனை அடைத்தோம். பாகபிரிவினை செய்யும்படி கேட்டபோது இந்தியன் வங்கியில் என் தாயார் பெற்ற கடனை அடைத்தால் தான் பாகம் செய்துகொள்ளமுடியும் என்று சொன்னதால் தான் நாங்கள் அடைத்தோம்.

(குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேண்டுதல் பேரில் ஒத்திவைக்கப்பட்டது.)

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 07th day of March 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.